**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC 393 /2021**
**Deposition of witness for prosecution –PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சவரிமுத்து |
| Father Name | : | திரு. ஜெபமாலை |
| Village | : | |
| Taluk | : | இராமநாதபுரம் |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | Business |
| Religion | : | |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 20th day of August 2024.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் என்னை விசாரணை செய்யும் போது வழக்கு தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் என்னிடம் கேட்டுப்பெற்று விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நீதிமணி அவர்கள் சிறைக்கு சென்ற பிறகு அவருடைய மனைவியிடம் நான் ஏதேனும் பணம் தொடர்பாக கேட்டு பெற்றேனா என்றால் ஆழ்வார்பேட்டையில் இருக்கும் போது நான் கேட்டேன். தேதி மற்றும் மாதம் எனக்கு நினைவில் இல்லை. அப்போது நீதிமணியின் மனைவி அவர்கள் பணம் தருவதற்கு ஏதேனும் முன் வந்தாரா என்றால் இல்லை. என் கணவர் வந்தவுடன் பேசிக்கொள்ளுங்கள் என்றார். அவரது கணவர் வெளியில் வந்த பிறகு நான் எப்போது சென்று பணம் கேட்டேன் என்றால் செப்டம்பர் 2020ல் கேட்டேன். நான் எந்த தேதியில் சென்று பணம் கேட்டேன் என்ற விபரத்தை நான் மனுவிலோ என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் நான் சொல்லியிருக்கிறேன். மேற்படி என்னிடம் காட்டப்படும் மனுவில் அவை எங்கு கூறப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் இல்லை. மாதம், வருடம் மட்டுமே உள்ளது. தேதி இல்லை. நான் சென்னையில் உள்ள ஆழ்வார்பேட்டைக்கு சென்று எதிரியின் வீட்டில் கேட்கும் சமயத்தில் அவர்கள் மேற்படி வீட்டினை காலி செய்து சென்றுவிட்டார்கள்

என்று சொன்னால் சரியல்ல. எதிரியினை காவல் துறையினர் கைது செய்துவிட்டதால் அவர் சார்ந்த ஆவணங்கள் மற்றும் கம்பெனி சார்ந்த ஆவணங்கள் அனைத்தையும் காவல்துறையினர் கைப்பற்றிவிட்டார்கள் என்று சொன்னார்கள் என்றால் தவறு. எதிரியின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்ட பிறகு அவர் நடத்தி வந்த கம்பெனியின் வங்கி கணக்குகள் முடக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் காசோலையை கலெக்ஷனுக்கு போடும் போது பணம் இல்லை என்று வந்தது. ம.சா.ஆ.1 ஆவணமானது எந்த தேதியில் என்னிடம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அவர்கள் தேதி போடாமல் கொடுத்துவிட்டார்கள் நான் கவனிக்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொல்லிள்ளபடி ம.சா.ஆ.1 ஆவணம் என்னிடம் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தின் படி நானும் எனது நண்பர்களும் வைப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு ஆதரவாக காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் கொடுத்த தொகை அனைத்திற்கும் சேர்த்து காசோலை கொடுக்கப்பட்டது. நான் கொடுத்த பணத்திற்கு ஆதரவாக மட்டுமே காசோலை கொடுக்கப்பட்டுள்ளதால் எனது நண்பர்களின் பேரில் தனியாகவும், எனது பேரில் தனியாகவும் காசோலை வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனது நண்பர்கள் யார் யார் எனக்கு பணம் கொடுத்தார்களோ அவர்களை சாட்சியாக அழைத்துச் சென்று நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் மேற்படி 1 கோடியே 25 லட்சம் கொடுப்பதற்கு வசதி இல்லை என்பதாலும் நான் எனது நண்பர்களிடமிருந்து பெற்றேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து ஒரு மையினாலும், அதில் உள்ள விபரங்கள் வேறொரு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இரண்டும் ஒரே மையினால் எழுதப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் காசோலையை பார்த்த முதல் தோற்றத்திலேயே அதன் உண்மைவிபரம் தெரிய வரும் நிலையில் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கும் நான் எந்த விதத்திலும் உண்மையாக சாட்சியம் அளிக்க இயலாதவர் என்றால் சரியல்ல. காசோலை திருப்பப்பட்ட பிறகு மீண்டும் மேற்படி விபரத்தை எடுத்துரைத்து நான் எதிரியிடம் பணம் கேட்டேனா என்றால் நான் நீதிமன்றத்திற்கு வந்துவிட்டேன். நான் ஜீலை மாதம் 2021ம் வருடம் காசோலையை வசூலுக்கு செலுத்தக்கோரி ம.சா.ஆ.4ல் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் மேற்படி தேதி 20 ஆகும். 20.07.2021 என தேதியிட்டு காசோலை வழங்கியதாக நான் ம.சா.ஆ.4ல் கூறவில்லை என்றால் சரிதான். மனுவில் கூறப்பட்டவாறு எதிரி தேதி குறிப்பிட்டு காசோலை எனக்கு வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 09.09.2020ம் தேதி சிறையில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டு 10.09.2020ம் தேதியிலிருந்து இராமநாதபுரம், மதுரை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் நிபந்தனை கையொப்பம் செய்து கொண்டிருந்தார். என்றும் இந்நிலையில் காசோலை வழங்கியதாக கருதப்படும் சமயத்தில் அவர் சென்னையில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

பொதுவாக நிறுவனம் தொடர்பான காசோலை மோசடி வழக்குகளை விசாரிக்க TANPID என்ற சிறப்பு நீதிமன்றம் உள்ள நிலையில் மேற்படி வழக்கானது காசோலை மோசடி வழக்காக தனியாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக்கூடாது என்று உயர்நீதிமன்றம் சொல்லியுள்ள நிலையில் மேற்படி இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரியிடம் பணியாற்றிய ஆனந்த் என்பவர் பணிபுரியும் காலத்தில் அவர் வசம் இருந்த கையொப்பமிட்டு நிரப்பப்படாத காசோலை மற்றும் லெட்டர் பேடுகளை தவறாக பயன்படுத்தி நான் என்மூலமாக இவ்வழக்கை பொய்யாக எதிரியின் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் இடையே பண ரீதியாக கொடுக்கல் வாங்கல் தொடர்பான கடப்பாடுகள் எதுவும் சட்டப்படியாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஆனந்த் என்பவருடைய நெருங்கிய நண்பர் என்பதாலும், தொழில் ரீதியாக எதிரிக்கும் ஆனந்திற்கும் உள்ள விரோதத்தை கருத்தில் கொண்டு தற்போது இவ்வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆனந்த் மீது புகார் கொடுத்து அதன் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் நான் புகார் கொடுக்கவில்லை. உண்மையில் வழக்கில் சொல்லியுள்ள படி நான் ஆனந்த் என்பவர் மூலமாக அறிமுகமாகி நான் எதிரி நிறுவனத்திடம் பணம் கொடுத்திருந்தால் நான் ஆனந்த் மீதும் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. ஆனந்த் என்பவரை விசாரணை செய்தால் நான் எந்த வகையில் ஆனந்த் என்பவர் மூலம் அறிமுகமானேன் என்ற விபரமும், எந்த அடிப்படையில் பணம் கொடுத்தேன் என்ற விபரமும் தெரிய வரும் என்றால் தெரியவராது. எனக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும், எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள படி 1ம் எதிரி என்னிடம் காசோலை வழங்கவில்லை அதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.